<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>

**OS.NO.**62/2024

2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ம் நாள் PW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் : 16.04.2026

**Pw1 ( அம்பிகா)**

<u>குறுக்கு விசாரணை ( 1,3 பிரதிவாதிகள் தரப்பில்)</u>

தாவா சொத்து ஆதியில் கிட்டப்பனுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டதா என்றால் இல்லை, தான செட்டில்மேண்ட் படி பாத்தியப்பட்டது. நான் 1990 ம் ஆண்டு பிறந்தேன். 1929 மற்றும் 1962 ஆவணங்கள் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. தாவா சொத்துக்களின் ஒரு பகுதியை அணை கட்டுவதற்காக அரசால் ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யப்பட்ட பகுதியில் தற்போது ஒரத்துப்பாளையம் அணை அமைந்துள்ளது என்றால் சரிதான். வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் சொல்லப்பட்டுள்ள வாய்மொழி பாகப்பிரிவினை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. வாய்மொழி பாகப்பிரிவினை யார் முன்னிலையில், எந்த மாதம், எந்த ஆண்டு, எந்த தேதி ஏற்பட்டது என எனக்கு நேரடியாக தெரியாது. சொத்துக்களை பாதுகாக்க கம்பி வேலி அமைத்ததாக சொல்லியுள்ளேன், அவ்வாறு எந்த ஆண்டு அமைக்கப்பட்டது என்றால் 2022 ம் ஆண்டு 4ம் மாதம் அமைத்தேன். முழுவதுமாக கம்பி வேலி அமைக்கவில்லை, ரோடு பக்கம் அமைத்துள்ளேன். பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பூமிக்கும் எனக்கு பாத்தியப்பட்டதாக சொல்லும் பூமிக்கும் இடையே கம்பி வேலி அமைக்கவில்லை என்றால் சரிதான்.

(வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED
Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2026.04.16 15:36:54 -1000

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS